இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப் பீடம்

முன்பள்ளிக் கல்வி சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம்

இறுதிப் பரீட்சை-2019/2020

**EPC1533/ESC1233** – பிள்ளை உளவியல்

பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : **11/06/2023** நேரம்: பி.ப 01.30 – பி.ப 04.30

## பகுதி I

1. பிள்ளை விருத்தியின் முக்கிய ஆட்சிகளைப் பெயரிடுக.
2. பிள்ளைகளின் அசாதாரண நடத்தைக்கு காரணமான காரணிகள் **இரண்டினை** (02) விளக்குக.
3. 'தன் அகமையம்' (ego centrism) என்பதனை உதாரணங்கள் மூலம் விளக்குக.
4. பிள்ளைகள் எவ்வாறு உள்ளார்ந்த நடத்தைகள், வெளிப்படையான நடத்தைகளை வெளிப்படுத்துகிறார்கள் என்பதை சுருக்கமாக விளக்குக.
5. முன்பள்ளி ஆசிரியரின் பிள்ளை உளவியலை கற்பதன் **அனுகூலங்கள் ஐந்தினை** (05) எழுதுக.
6. விசேட தேவையுடைய பிள்ளைகள் எனப்படுவோர் யார்? சுருக்கமாக விளக்குக.
7. பிள்ளையொன்றின் முதல் இரண்டு வருடங்களில் அக் குழந்தை பெற்றுக்கொள்ளக்கூடிய **மூன்று** (03) உள இயலுமைகளைப் பெயரிடுக.
8. தன்மயமாதல், தன்னமைவாக்கல் எனும் எண்ணக்கருக்களை விபரிக்குக.

(8x5= 40 புள்ளிகள்)

## பகுதி II

9.

i. சிறந்த சமூகமயமாக்கலுடைய பிள்ளைகளில் காணப்படும் பண்புகள் ஐந்தினை (05) குறிப்பிடுக.
(05 புள்ளிகள்)

ii. பிள்ளையொன்றின் சமூக விருத்தியை ஊக்குவிக்க முன்பள்ளி ஆசிரியரொருவர் ஏற்பாடு செய்யக்கூடிய மூன்று (03) செயற்பாடுகளை விபரிக்குக.
(15 புள்ளிகள்)

10.

i. பிறப்பிற்கு முன்னரான காலத்தில் பிள்ளைகளின் வளர்ச்சியை பாதிக்கும் நான்கு (04) சுற்றாடல் காரணிகளை பெயரிடுக.
(08 புள்ளிகள்)

ii. மேற்குறிப்பிட்ட காரணிகள் , பிள்ளையின் பிறப்பிற்கு முன்னரான விருத்தியில் ஏற்படுத்தும் தாக்கங்களை விளக்குக.
(12 புள்ளிகள்)

11.

i. ஆசிரியர்கள் பிள்ளைகளின் கற்றல் நடத்தையில் பல்வேறுபட்ட ஆய்வு முறைமைகளைப் பயன்படுத்த முடியும். அவற்றுள் ஐந்தினை (05) பட்டியற்படுத்துக.
(05 புள்ளிகள்)

ii. நீங்கள் குறிப்பிட்டவற்றுள் ஏதேனும் ஒரு முறையைத் தெரிவுசெய்து, முன்பள்ளிப் பிள்ளையை ஆய்வுசெய்ய அம்முறையை எவ்வாறு பயன்படுத்துவீர்கள் என்பதை விபரிக்குக.
(15 புள்ளிகள்)

12.

i. ‘பரம்பரை’, ‘சூழல்’ ஆகிய இரு எண்ணக்கருக்களை உதாரணங்கள் மூலம் விளக்குக.
(10 புள்ளிகள்)

ii. பிள்ளைகளின் விருத்தியில் தூண்டும் சூழல் (Stimulate environment) எவ்வாறு உதவுகிறது என்பதை விளக்குக.
(10 புள்ளிகள்)

13.

i. முன்பள்ளி பிள்ளைகளிடத்தில் காணப்படும் பொதுவான மனவெழுச்சி கோலங்கள் ஐந்தினை (05) பெயரிடுக.
(05 புள்ளிகள்)

ii. மேற்குறிப்பிட்டவற்றுள் ஏதேனும் இரண்டு (02) மனவெழுச்சிக் கோலங்களை சுருக்கமாக விபரிக்குக.
(07 புள்ளிகள்)

iii. முன்பள்ளி ஆசிரியரொருவர் பிள்ளைகளிடத்தில் சமநிலையான மனவெழுச்சி சூழலை எவ்வாறு உருவாக்க முடியும் என்பதை விபரிக்குக.
(08 புள்ளிகள்)

பதிப்புரிமை பெற்றது